பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 23 செவ்வாய்க்கிழமை 08.08.2023 கதிர் 270

# வறட்சியால் 12 மாவட்டங்களில் 1 லட்சம் பேர் வரையில் பாதிப்பு

## அவர்களுக்கு குடிதண்ணீர் வழங்க அரச நடவடிக்கை

கடும் வறட்சியால் 12 மாவட்டங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. 48 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

எல்நினோ தாக்கம் காரணமாக இலங்கையில் கடும் வறட்சி நிலவுகின்றது. ஒக்டோபர் பருவப் பெயர்ச்சி மழை வரும் வரைக்கும் பல மாகாணங்களிலும் மழை பெய்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ள நிலையில் குறைந்தது மூன்று மாதங்களுக்கு வறட்சி வாட்டி எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பேரிடர் முகாதத்துவ அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது:

வறட்சியைச் சமாளிக்க 12 மாவட்டங்களில் சுமார் 40 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு கொள்கலன் தாங்கிகள் (பவுசர்) மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதுடன், ☞2

## இது ரகசியம் அல்ல!

நாடு எப்படித்தான் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டாலும், வங்குரோத்து ஆனாலும் ;நட்டைக் குட்டிசுவராக்குவதிலிருது அரசில்வாதிகள் திருந்தப் போவதில்லை என்பது பற்றிய செய்திதான ;இன்று உங்களோடு பகிர்ந்துகொள்ளப்போவது.

சட்டமா அதிபரினால் இலங்கைக்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்ட கச்சாய் எண்ணெய் கப்பல், ஒன்றை, கப்பலின் பெயரையும் அதன் பதிவு செய்யப்பட்ட நாட்டையும் மாற்றிவிட்டு இலங்கைக்குள் கொண்டுவருவதற்கு அரசியல்வாதிகள் சிலர் இடைவடா முயற்சி மேற்கொண்டுள்ளனர். சட்டமா அதிபரின் உத்தரவை மீறி கப்பலை இலங்கைக்குதிரும்புவதற்கானஏற்பாடுகளை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கச்சாய்எண்ணெய்யைஇறக்குமதிசெய்ய மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்கான பணம் முறையான வகையில் - நேர்மையாகச் - செலுத்தப்படவில்லை என்று கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து கப்பல் இலங்கைத் துறைமுகத்திற்குள்ளே மட்டுமல்ல இலங்கைகுக் கடல் எல்லைக்குள்ளேகூட நுழையக்கூடாது என்று உத்தரவிட்டார். இதன் காரணமாக பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட ☞2

## நீதியரசர்கள் நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக, நீதியரசர் சோபித ராஜகருணா நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார்.

மேல் நீதிமன்ற நீதிபதி எம்.சி.பி.சஞ்சீவ மொராயஸ், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகவும் ஜனாதிபதி முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

## 4ஆவது தமிழியல் மாநாடு நேற்று யாழ். பல்கலையில் தொடங்கியது



நான்காவது அனைத்துலகதமிழியல்ஆய்வுமாநாடு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமானது.

'சமூகக் கட்டுமானத்தில் சங்கமருவியகால அற இலக்கியங்கள்' எனும் கருப்பொருளைமையமாகக்கொண்டு இடம் பெறும் நான்காவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடானது தொடர்சியாக இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கிருஸ்ணப்பிள்ளை விசாகரூபன் தலைமையில் தொடங்கிய இந்தஆய்வுமாநாட்டில்யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜாஅதிதியாகக் ☞2

## ராஜபக்ஷக்களுக்கு எதிராக மீண்டும் சேறு வாரியிறைக்கும் பரப்புரையாம்

ராஜபக்ஷகளுக்கு எதிராகச் சேற்றை வாரியிறைக்கும் பிரசாரம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாமல் ராஜபக் ஷவின் திருமண நாளன்றுக்கான மின்சாரக் கட்டணம் செலுத்தப்படவில்லை என்ற விடயம் தற்போது அரசியல் மேடையில் பேசுபொருளாக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்;தமாக நாம், அவருடன் தனிப்பட்ட முறையில்உரையாடியபோது அவருக்குஅதற்கானபட்டியல் அனுப்பிவைக்கப்படவில்லை என்பது உறுதியாகின்றது.

இவ்வாறானநிலையில், தற்போது,ராஜபக்ஷக்களுக்கு சேறுபூசும்பரப்புரை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. இது வொரு திட்டமிட்ட செயற்பாடாகும்.

பிச்சைக்காரன்புண்போல சிலரின் அரசியலுக்கு ராஜபக்ஷக்கள் மீது பொய்யான பரப்புரை மேற்கொள்ளும் தேவை இருப்பதை நாம் அறிந்துள்ளோம் - என்றார்.

## ஆண்டின் முதல் 5 மாதங்களில் அரசின் வருமானம் அதிகரிப்பு

### அதேபோல் செலவுகளும் அதிகரிப்பு

இந்தவருடத்தின்ஜனவரி முதல் மே வரையான முதல் ஐந்து மாதங்களில் அரசின் வருமானம் 38 சதவீதம் அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கி அறிக்கை தெரிவிக்கின்றது.

இதே5மாதங்களில்வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை ஒரு இலட்சம் கோடி ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

2022 முதல் ஐந்து மாதங்களில் அரசின் வருமானம்812.7பில்லியன்ரூபாவாகும்.இந்தஆண்டுஅது1.1லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

அதேசமயம் இந்த ஆண்டு அரச செலவினம் 47 சதவீதத்தால்அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு குறித்த காலப் பகுதிக்கான அரச செலவினம் 1.45 டிரில்லியன் ரூபாவாக இருந்தது, இந்த ஆண்டு அது 2.13 டிரில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

அரச வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான வேறுபாடு காரணமாக, இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களுக்கான வரவு செலவுத் திட்ட இடைவெளி 1.01 டிரில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. கடந்த வருடம் குறித்த காலப்பகுதியில் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 636.7 பில்லியன் ரூபாவாக இருந்தது.

## சமனல வாவியில் இருந்து நீரைத் திறக்க அரசு முடிவு

### விவசாயிகளின் தொடர் போராட்டத்தை அடுத்து

சமனல வாவியிலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீரை மூன்று நாட்களுக்கு விநியோகிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் டி.வி.சாணக்க தெரிவித்தார்.

நேற்று மாலையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், தேசிய மின் தேவைக்கான மாற்றுத் தீர்வுகளை ஆராய்ந்து நீரை விநியோகிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுடன் 15நாட்களாக தொடர்ச்சியாக சமனல வாவியிலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்காகநீரைத் திறந்து விடுமாறு கோரி விவசாயிகள் போராட்டம் நடத்தியிருந்தனர்.ஞாயிறன்று அவர்கள் விவசாய அமைச்சரின் வீட்டையும் முற்றுகையிட்டிருந்தனர்.

விவசாயிகளுக்கு ஆதரவாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிம் போராட்டக் களத்தில் குதிக்கப் போவதாக அறிவித்திருந்தது.

ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான அரகலய போராட்டத்திலும்இந்த ☞2

## ஜனாதிபதி - மலையகக் கட்சிகள் ஓகஸ்ட் 11 சந்திப்பு ஒத்திவைப்பு

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திய வம்சாவளி மலையக கட்சிளுக்கும், ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஒகஸ்ட் 11, வெள்ளிக்கிழமைகொழும்பில் நடக்க இருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்புக்கான அழைப்பு ஜனாதிபதியால் விடுக்கப்பட்டிருந்த நிலையில் அது ஒத்திவைக்கப்படுவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஓகஸ்ட் 12 நுவரெலியாவில், தமிழ் முற்போக்குக் கூட்டணி, மலையகம்-200 தொடர்பில் நடத்த உள்ள, 'நாம் இலங்கையர்' பேரணி காரணமாக, கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓகஸ்ட் 11 கொழும்பில் இருக்கமாட்டார்கள் என்ற காரணத்தாலும், ஓகஸ்ட் 10 பெருந்தோட்டமக்கள்எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில், தமிழ் முற்போக்கு கூட்டணி முன்வைத்துள்ள முழுநாள் விவாதம் ☞2

## பம்பலப்பிட்டி சூடு தொடர்பில் மதுவரி அலுவலர் 4 பேர் கைது

பம்பலப்பிட்டி பகுதியில் மேற்கொள்ளப்பட்டதுப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையநான்குசந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கைதான நால்வருமே மதுவரித் திணைக்கள அலுவலர்கள் என்றும் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பம்பலப்பிட்டி மெரின் ட்ரைவ் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் நேற்று மாலை கார் ஒன்றின் மீது துப்பாக்கிச்குடு நடத்தப்பட்டது.

வான் ஒன்றில் வந்த அடையாளந் தெரியாத குழுவொன்று காரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத்தப்பிச்சென்றது.

தாக்குதலைத்தொடர்ந்து காரும் அங்கிருந்து தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு '13' ஊடாகத் தீர்வு காண்பார் ஜனாதிபதி!

### இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் சொல்கின்றார்

13ஆவது திருத்தச்சட்டம் ஊடாக வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன்உள்ளார்என்றுகிராமிய வீதிகள்அபிவிருத்திஇராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில்கடும்போக்கு அரசியல்வாதிகளின்கருத்துக்களால் தென்னிலங்கை மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்,

“ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க,13ஆவதுதிருத்தத்தை அமுல்படுத்த முயற்சி எடுத்து



வருகின்றார். நாடாளு மன்றத்தில் வடக்கு ☞2

## வான்படை பயிற்சி வானூர்தி வீழ்ந்து நொருங்கி விபத்து

### இரு வானோடிகளும் உயிரிழப்பு



இலங்கை வான் படைக்குச் சொந்தமான பயிற்சி விமானம் திருகோணமலை சீனன்குடா பயிற்சித் தளத்தில் நேற்று விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொருங்கியது. அதிலிருந்த பயிற்சி வானோடிகள் இருவரும் உயிரிழந்தனர்.

வான்படையின்சீனக்குடா கல்லூரியில் அமைந்துள்ள இலக்கம் 1 பறக்கும் பயிற்சி பிரிவின் பிரி- 6 ரக வானூர்தியே விபத்துக்குள்ளாகி நொருங்கியதாக இலங்கை வான்படை அறிவித்துள்ளது.

நேற்று முற்பகல் 11.27 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்த வான் படைத் தளபதிஎயார்மார்ஷல்உதேனி ராஜபக்ஷவினால் தனி விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## இனி இது .....

நாடு மாற்றப்பட்டு, மீண்டும் இலங்கையை வந்தடைய தயாராக உள்ளது கப்பல்..

இப்போது இந்தோனேசியக் கொடியின் கீழ் பதிவு செய்யப் பட்ட அந்தக் கப்பல் இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கைக்கு வர உள்ளார்.

இக்கப்பல் முன்னதாக இலங்கை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில், கொடுக்கல் வாங்கல்கள் சட்டப்பூர்வமானது அல்ல எனக்கூறி நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு சட்டமா அதிபர் மறுத்திருந்தார்.

அரசியல் தொடர்புகளுடன் இந்தஒப்பந்தத்தின்பின்னணியில் இலங்கைக்கு கச்சா எண்ணெய் வழங்கும் பெரு நிறுவனம் ஒன்று இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த கப்பல் முதலில் ரஷ்யாவைவிட்டுவெளியேறி ஜூலை மாதம் இந்த நாட்டை அடைய வேண்டும்.

சட்டமா அதிபரின் உத்தரவின் பேரில் சர்வதேச கடற்பரப்பில் தற்போது வரை கப்பல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. அதனை எப்படியாவது நாட்டுக்குள் கொண்டு வந்து விடத் துடிக்கிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வறட்சியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

156,000 பேருக்கு குடித்ணணீர் விநியோகிக்கப்படுகிறது. கால்நடைகளுக்கும் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் குடிநீருக்காக 2 மில்லியனுக்கும்அதிகளவானதொகையினைஅரசுசெலவிட்டுள்ளது.

வறட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள 12 மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு குடிதண்ணீரைவிநியோகிப்பதற்கான தனியான வேலைத்திட்டம் ஒன்றும்தொடங்கப்பட்டுள்ளது - என்றார்.

## வடக்கு,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கிழக்கு, மக்கள் பிரதிநிதிகளிடம் 13 ஆவது அரசமைப்பை நடைமுறைப்படுத்துவது குறித்து கருத்துக்களைக் கேட்டறிந்தார். அண்மையில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும்அனைத்து கட்சிகளையும் அழைத்து சர்வகட்சிமாநாடுஒன்றையும் நடத்தினார்.

ராஜீவ் - ஜே. ஆர் ஜயவர்தன ஆகியோர் அன்று 13 ஆவது திருத்த சட்டமூலத்தை கொண்டு வந்தபோது அன் றைய அமைச்சரவையில் ஒரு அமைச்சராக அங்கம் வகித்த தற்போதைய ஜனாதிபதி, இந்த அதிகாரப் பகிர்வுப் பிரச்சினைக்கு நிரந்தமான தீர்வை முன்வைப்பார் என்று எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

அதிகாரப்பகிர்வின்மூலம் நாடு துண்டாடப்படும் என்று தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் கருத்துக்களை வெளியிடும் அதேநேரம், முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும், எமக்கு முழுமையான அதிகாரப் பகிர்வு மாத்திரமே வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இவை இரண்டுமேஇருதீவிரநிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

13ஆவது அரசமைப்பை அமுல்படுத்துவதில் மிதமான போக்குடன் இருதரப்பும் சுமூகமான கலந்துரையாடல்களை நடத்தி இப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதே இந்நாட்டின் முன்னேற்றத்துக்குஉகந்தது.

13ஆவது அரசமைப்பின் ஊடாக வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் உள்ளார். ஆனால், இதில் பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வதில் மட்டும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் தீர்வு காண முடியும் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வடக்குமற்றும்கிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் பிரதிநிதிகளைப் போன்றே தெற்கில் உள்ள கடும்போக்குவாத சில சிங்களத்தலைவர்கள்வெளியிடும் தீவிரக் கருத்துக்களால் தெற்கில்உள்ளசிங்களமக்கள் அச்சம் அடையத் தேவையில்லை.இவைபெரும்பாலும் அரசியல் நோக்கங்களில் கூறப்படலாம்.

இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன்நம்பிக்கை வைத்து செயற்படுவதன் மூலமேஇப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். அவ்வாறான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

13 ஆவது திருத்தத்தை செயற்படுத்தத்தேவையானப் பரிந்துரைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன்படி, கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற வகையில் எமது கருத்துகளை முன்வைக்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

கிராமிய வீதி அபிவிருத்தி என்பது கல்வி, பொருளாதாரம் போன்ற பல்வேறு விடயங்களின் முன்னேற்றத்துக்கு மிக முக்கிய காரணியாக அமைகின்றது. ஆனாலும் நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியால் இவ்வாறான அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்குவது சிரமமாக இருந்தாலும், தற்போது அமைச்சில் உள்ள நிதியைக் கொண்டு முடியுமான வரை வீதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எதிர்வரும் காலங்களில் பல்வேறு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்று அமைச்சு திட்டமிட்டுள்ள எதிர்கால அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவுள்ளோம். கப்பற்றுறை, உற்பத்தித் துறை, சுற்றுலா வலய மேம்பாடு, ஏற்றுமதி பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு, மீன்பிடி மற்றும் உள்நாட்டில் பயிரிடக் கூடிய தானியங்களைப் பயிரிடல் போன்றபல்வேறுபணிகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் முந்திரி பயிர்ச் செய்கையை மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம். முறையாக பயன்படுத்தப்படாமல் உள்ள அரசுக்குச் சொந்தமான அரச காணிகளை இதற்காகப் பயன்படுத்தவுள்ளோம். இந்தத் திட்டத்துக்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.' - என்றார்.

# காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு சட்டத்தரணிகள் சங்க தலைவர் வருகை

யாழில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு ஞாயிற்றுக்கிழமை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினுடையதலைவர்கௌசல்யா நவரத்தினம் விஜயம் செய்திருந்தார்.

குறித்த அலுவலகத்தின் தவிசாளர் சிரேஷ்ட சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்தவின் அழைப்பின் பேரிலேயே இந்த விஜயம் இடம்பெற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதன் போது குறித்த அலுவலகத்தில் இடம்பெறும் விசாரணைகள் தொடர்பிலும் அலுவலகத்தின்செயற்பாடுகள் தொடர்பிலும் கௌசல்யா நவரத்தினம் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் குறித்த அலுவலகத்தின் நிர்வாக அதிகாரி சிரேஷ்ட சட்டத்தரணி தற்பரன், யாழ்.பிராந்தியஇணைப்பாளர் செல்வகுமார், ஜனாதிபதியின் மேலதிக இணைப்பாளர் இளங்கோவன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (05)

## 4ஆவது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டார்.

மாநாட்டில் கலை, கலாசார நிகழ்வுகள், ஆய்வுரைகள்மற்றும்புலமையாளர் கௌரவிப்புக்கள் என்பன இடம்பெற்றன.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், உசிதமான தினத்தை கலந்தாலோசனையின் பின் தெரிவிப்பதாக ஜனாதிபதி செயலகம் தனக்கு அறிவித்துள்ளார் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

## சமனல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு மிக முக்கியமான பங்காற்றியிருந்தது. இந்தப் பின்னணியிலேயே தண்ணீரைத் திறந்துவிடும் முடிவை ஆட்சியாளர்கள் எடுத்துள்ளனர்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**
**076 3983858**
**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com

# உமா ஓயா நீர்மின் திட்டம் அடுத்த மாதம் தொடங்கும்

உமா ஓயா நீர்மின் திட்டம் நிறைவடைந்ததையடுத்து இந்த ஆண்டு இறுதிக்குள் இத்திட்டத்தை தொடங்க முடியுமென ஈரான் தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே, பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் தெரிவித்தார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறிவதற்காக அண்மையில் தினேஷ் குணவர்தன கிழக்கு மாகாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

இதன்பின்னர் நேற்று அலரிமாளிகையில் ஈரான் தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே மற்றும் பாரப் நிறுவனத்தின் பிரதம பிரதிநிதி நிமா நிக்டலை ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த இரண்டு ஆய்வுக் குழுக்கள் இரண்டு மாதங்களுக்குள்உமாஓயாநீர்மின்திட்டத்தை ஆய்வு செய்யவுள்ளன.

ஆய்வுகள்நிறைவடைந்தபின்னர்மின்சார உற்பத்தி மற்றும் நீர்ப்பாசனத்திற்கான நீரை வழங்கும் நடவடிக்கையை உடனடியாகத் தொடங்க முடியுமென்று நிமா நிக்டெல் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் 120 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதுடன், 50,000 ஏக்கர் உலர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியை வழங்க 45 மில்லியன் கன மீற்றர் நீர் வெளியிடப்படு; என எதிர்பார்க்கப்படுகிறது., உமாஓயாவில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பதுளை வரை கொண்டுசெல்லப்படவுள்ளதுடன் தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பின்போது, ஈரானுடன் தேயிலை மற்றும் மசகு எண்ணெய் பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியமை குறித்து தூதுவர் அஷ்ஜசாதே தனது பாராட்டுகளை தெரிவித்துடன், இந்த திட்டம் அடுத்த மாதம் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்

# '13' குறித்து நாளை ரணில் விசேட உரை

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நாளை விசேட உரையாற்றவுள்ளார்.

நாடாளுமன்றநிகழ்ச்சிநிரலில்இவ்விடயம் உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வகட்சி மாநாட்டை ஜனாதிபதி நடத்தியிருந்தார். கட்சிகளின் யோசனைகளை முன்வைப்பதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே 13 இன் அடுத்த கட்ட நகர்வுகள் சம்பந்தமாக ஜனாதிபதி நாளை உரையாற்றவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

# சீனப் பெண்ணிடம் அலைபேசி பறிக்க முயன்ற இருவர் கைது

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி ஓடும் உதார மெனிகே தொடருந்தில் பயணித்த சீனப் பெண்ணின் தொலைபேசியைக் கொள்ளையடிக்க முயன்ற சந்தேகத்தின் பேரில் இரு சந்தேகநபர்களை நாவலப்பிட்டி பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கைது செய்தனர்.

லியு கின் என்ற சீனப் பெண், தனது கணவன் மற்றும் மகளுடன் இலங்கைக்கு சுற்றுலாவியாக வந்திருந்தார். வீதி ஆலோசகருடன் எல்ல தொடருந்து நிலையத்திற்குச் சென்று, நாவலப்பிட்டி இகுருஓயா தொடருந்து நிலையத்திற்கு அருகில், தொடருந்தின் ஜன்னலுக்கு வெளியே தனது கைத்தொலைபேசியில் அழகிய இடங்களை காணொலியாகப் பதிவு செய்துகொண்டிருந்தார்.

அப்போது அங்கிருந்த 3 வாலிபர்களில் ஒருவர் வீடியோ படம் பிடித்து கொண்டிருந்த பெண்ணை நீண்ட தடியால் தாக்கியுள்ளார். அந்த இளைஞர்கள் அவரைத் தாக்கும் காட்சிகள் அவரது கைத்தொலைபேசியில் பதிவாகியுள்ளதுடன், தாக்குதலால் அவரது கையில் காயம் ஏற்பட்டுள்ளது.

காயம் பட்ட லியு கின் சம்பவம் குறித்து உடனடியாக தமது சுற்றுலா வழிகாட்டியிடம் தெரிவித்தார். அவர் உடனடியாக சீன மொழியில் முறைப்பாட்டை பதிவு செய்து, அதனைச் சிங்களத்தில்மொழிபெயர்த்து, கையடக்கத்தொலைபேசியில் நாவலப்பிட்டி பொலிஸாருக்கு புலனம் (வட்ஸ்அப்) ஊடாக அனுப்பிவைத்துள்ளார். துரிதமாகச் செயற்பட்ட நாவலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹரேந்திர கலுகம்பிட்டிய இகுரு ஓயா தொடருந்து நிலையத்திற்குச் சென்று இரு சந்தேகநபர்களையும் கைது செய்தனர்.

மற்றுமொரு சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என்று நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நாவலப்பிட்டி இகுருஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் 22-24 வயதுக் குட்பட்டவர்கள் எனவும், சந்தேகநபர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும், கைது செய்யப்பட்ட பின்னர் நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் அதிகாரிக்கு சீனப் பெண் புலனம் (வாட்ஸ்அப்) மூலம் அனுப்பிய செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

என் பெயர் லியு கின். நானும் எனது கணவரும் மகளும் சுற்றுலாவிற்காக இலங்கை வந்தோம். நாங்கள் மலைகளுக்கு தொடருந்தில் சென்றபோது, நான் ஜன்னலுக்கு வெளியே அற்புதமான இயற்கைக் காட்சிகளையும் நட்பு மனிதர்களையும் ஒளிப்படம் எடுத்துக்கொண்டிருந்தேன். தொடருந்துக்கு வெளியே இருந்த மூன்று பேரில் ஒருவர் எனது தொலைபேசியைப் பிடுங்கி, நீண்ட மரக்குச்சியால் என் முழங்கையில் பலமாக அடிக்க முயன்றார். அந்த முயற்சியில் அவர்கள் தோல்வியுற்றனர், அவர்களின் படங்கள் எனது தொலைபேசியில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இப்போது என் கையில் காயம் மற்றும் நீல நிறத்தில் கண்டிப் போய் உள்ளது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, இலங்கையின் சுற்றுலா வழிகாட்டியான வினு, எனது காயம் குறித்துச் சிறப்பு கவனம் செலுத்தி, எனது குடும்பத்தினருக்கும் எனது உணர்வுகளுக்கும் ஆறுதல் அளித்து, சூழ்நிலையை சாதகமாக கையாண்டார். மூன்று பேரையும் கைது செய்வதற்காக ஒருங்கிணைந்த தொடருந்துப் பணியிலிருந்த மேலாளரையும் காவல்துறையினரையும் அழைக்க அவர் பலமுறை எனக்கு உதவினார். சுற்றுலாவழிகாட்டி, சிக்கலைத் தீர்ப்பதில் மிகவும் உறுதியுடன் இருந்தார். அதே நாள் மாலைக்குள், பொலிஸார் ஒருவரைக் கைது செய்தனர் எனக் கேள்விப்பட்டேன். மிக்க நன்றி.

நானும் எனது குடும்பமும் இலங்கையை மிகவும் நேசிக்கிறோம், இந்த நாடும் மக்களும், ஒவ்வொரு சிரிக்கும் முகமும், ஒவ்வொரு காற்றும் எங்களைத் தொடுகின்றன. எப்போதாவது நடக்கும் இது போன்ற மோசமான சம்பவங்கள் இலங்கைப் பற்றிய எனது நல்ல உணர்வுகளை பாதிக்க நான் அனுமதிக்க மாட்டேன். இந்தச் சம்பவம் தீர்க்கப்பட்டு, இலங்கை முன்னேறிச் சிறப்பாக வளர்ச்சியடையும் என நம்புகிறேன்!

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு என்றும் நிலைத்திருக்கும் - என்றுள்ளது.






# நிதி ஆதாயத்துக்காக தரமற்ற பாடநெறிகளை நடத்திய 81 கல்வி நிறுவனங்களுக்குத் தடை

## உபகோப் குழுவில் அதிகாரிகள் சுட்டிக்காட்டல்

நிதி ஆதாயம் இலக்காக கருதி தரமற்ற பாடநெறிகளை நடத்திய 81 கல்வி நிறுவனங்கள் இதுவரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கோப் உபகுழுவில் குறிப்பிட்டனர்.

அந்த நிறுவனங்கள் மீதான தடையுடன் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் விளம்பரப்படுத்துவது மற்றும் அந்த நிறுவனங்களுக்கு முத்திரையிடுவது தொடர்பான சட்ட நடவடிக்கைகளுடன் முறையான திட்டத்தைத் தயாரிக்குமாறு உபகுழு அதிகாரிகளுக்குப் பரிந்துரைத்தது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழிற்சந்தையை இலக்குவைத்து சகல தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வளங்களை ஒன்றிணைத்து பொது வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதை விரைவுபடுத்துமாறு மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் நியமிக்கப்பட்ட உபகுழு கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

உயர் சம்பளத்துடன் கூடிய சில வெளிநாட்டு வேலைகளுக்கு அதிக தேவை இருப்பதால் தரமான - திறமையான - தொழிலாளர்களை உருவாக்க அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை உபகுழு வலியுறுத்தியது.

2023 மே 16 ஆம் திகதி கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழு உள்ளிட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட உபகுழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தலைமையில் கடந்த வாரம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கூடியது.

இதன்போதே குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இந்தக்கூட்டத்துக்கு கல்வி அமைச்சு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு, தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை, ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

சில தொழிற்கல்வி நிறுவனங்களின் பணிகள் மற்றும் நோக்கங்கள் சீராக இல்லாததால், பொதுவான வேலைத்திட்டத்தின் அவசியம் தொடர்பாகவும் இங்கு விவாதிக்கப்பட்டது.

க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை நிறைவுசெய்த மாணவர்களை உள்ளடக்கிய புதிய வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான முன்னோடித் திட்டம் செப்ரெம்பர் மாதம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். இவ்வாறான வேலைத்திட்டங்கள் பல்வேறு அரசுகளின் கீழ் மாற்றங்களுக்கு உட்படுத்தப்படாத பொதுவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் வகுகக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் குழு வலியுறுத்தியது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்பிக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்குக் குறைவான சம்பளம் வழங்கப்படுவது போன்ற பிரச்சினைகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. இதன்படி மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் நியாயமான கட்டணம் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் இது தொடர்பில் முறையான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்து ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு உபகுழு பணிப்புரை விடுத்துள்ளது.

இந்த நிறுவனங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தேசிய தகவல் அமைப்பைத் தயாரிப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவில் ஏற்கனவே தரவு அமைப்பு இருப்பதாகவும் அவற்றுடன் தற்பொழுது ஈடுபாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாத பரீட்சைத் திணைக்களம் போன்ற நிறுவனங்களையும் அவற்றுடன் ஒன்றிணைத்து இந்தத் தகவல் கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரைத்தது.

போலி என்.வி.க்யு சான்றிதழ்களை கண்டறிந்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் குழு சுட்டிக்காட்டியது. இந்தச் சான்றிதழ்களை க்யுஆர். குறியீடுகள் மூலம் அடையாளம் காண முடியும் என்றாலும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தற்போதுள்ள குறைபாடுகளை பூர்த்தி செய்ய சட்டத்தில் திருத்தத்தை விரைவுபடுத்துமாறு குழு அறிவுறுத்தியது.

அரச மற்றும் தனியார் துறையில் உள்ள பதவிகளை சர்வதேச மற்றும் உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளாக மாற்றப்பட வேண்டியதன் அவசியமும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டது. இது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

என்.வி.க்யு. சான்றிதழ் பாடநெறிகளை முறையாக ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

நிதி ஆதா யம் மட்டுமே கருதி தரமற்ற பாடநெறி களை நடத்திய 81 கல்வி நிறுவனங்கள் இதுவரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இருந்தபோதும் அதனையும் மீறி பத்திரிகை விளம்பரங்கள் மூலம் விளம்பரப்படுத்துவது மற்றும் அந்த நிறுவனங்களுக்கு முத்திரையிடுவது தொடர்பான சட்ட நடவடிக்கைகளுடன் முறையான திட்டத்தை தயாரிக்கு மாறும் குழு பரிந்துரைத்தது. (05)



# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் வாழ்வகத்துக்குச் சேவைத் திட்டம்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக பதவியேற்பு ஞாயிற்றுக்கிழமை கழகத் தலைவர் லயன் க.டினேஷ் தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் புதிய தலைவராக வலி.வடக்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் லயன் செ.விஸ்ரீஜயராஜ் பதவியேற்றார்.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக அனைத்து மாவட்ட லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவரும் நீர்கொழும்பு கோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டலின் நிர்வாக இயக்குநருமாகிய லயன் தேவா டி பீற்றர் - லயன் ஜசிந்தா பீற்றர் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக லயன்ஸ் கழக ஆளுநர் சபை ஆலோசகரும், கொமர்சல் வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குநருமாகிய லயன் சிவ.ரங்கநாதன் - லயன் கெலனி தம்பதிகளும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் புதிதாக தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட லயன் செ.விஜயராஜ், சுன்னாகம் வாழ்வகம் விழிப்புலனற்றோர் நிலையத்துக்கு ஒருநேர மதிய உணவுக்கான காசோலையை வாழ்வகத் தலைவர் ஓய்வுநிலை விரிவுரையாளர் ஆ.இரவீந்திரனிடம் வழங்கிவைத்தார். (05)

# தேர்தலை நடத்துமாறு கோரி அவசரப்படுவோரின் கோரிக்கைக்கு பின்னால் சர்வதேசத் தேவைப்பாடு

## வஜிர அபேவர்த்தன கூறுகிறார்



வீழ்ச்சியடைந்திருந்த நாட்டைக் கட்டியெழுப்ப முன்வந்திருக்கும் ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டின் தேசிய சொத்தாகும்.

தேசிய சொத்தைப் பாதுகாத்துக்கொள்ளத் தவறினால் நாங்கள் அனைவரும் கஷ்டத்தில் வீழ்ந்திடுவோம்.

அத்துடன் நாட்டின் தற்போதைய நிலைமையில் சிலர் தேர்தலை நடத்தக்கோரி அவசரப்படுகின்றனர்.

இவர்களின் இந்தக் கோரிக்கைக்குப் பின் னால் சர்வதேசத்தின் தேவைப்பாடுகளும் இருக்கலாம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் லக்கல தொகுதி மாநாடு நாவுல கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இந்த நாட்டை விழுந்த இடத்தில் இருந்து மீண்டும் தூக்கிவைப்பதாக இருந்தால், எனக்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என்றே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப்பேற்றவுடன் தெரிவித்தார்.

யாரையும் கைவிட்டு இந்தப் பயணத்தை செல்ல முடியாது. வைராக்கியம், குரோதம். பொறாமைபட்டுக் கொண்டு இந்த நாட்டை உலகுக்கு முன்னால் தூக்கி வைக்க முடியாது.

அத்துடன் நாங்கள் இன, மத, குலம் எனப் பிரிந்தோம். அதனால் நாடு என்றவகையில் நாங்கள் பின்னுக்கு சென்றோம். தற்போது அந்த நிலையை மாற்ற வேண்டும். நாங்கள் மிகவும் கஷ்டமான காலத்தையே தாண்டினோம்.

அந்த கஷ்டமான காலத்தைத் தாண்டி தற்போது முன்னுக்கு வந்திருக்கிறோம். எங்களுக்கு எதிர்காலம் தேவை என்றால் - எங்கள் பிள்ளைகளுக்கு எதிர்காலம் தேவை என்றால் - நாங்கள் தூரநோக்குடன் சிந்தித்து செயற்படவேண்டி இருக்கிறது. எமக்குத் தவறிய இடங்களை சரி செய்துகொள்ள வேண்டி இருக்கிறது.

அத்துடன் வீழ்ந்திருந்த தேசத்தைக் கட்டியெழுப்ப ரணில் விக்ரமசிங்க இருந்தமையிட்டு நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். தேசிய சொத்தாகவே ரணில் விக்ரமசிங்க எமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கிறார். அந்த தேசிய சொத்தை நாங்கள் கவனமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

பாதுகாத் துக்கொள்ளத் தவறினால் நாங்கள் அனைவரும் கஷ்டத்தில் வீழ்ந்திடுவோம். அதனால் யாரையும் எந்த கட்சியையும் ஒதுக்கிவிட்டு இந்தப் பயணத்தைக் செல்ல முடியாது. அனைவரும் எமக்குத் தேவை. மேலும் ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டை தேசிய தலைவராக ஆட்சி செய்வதென்பது. இந்த நாட்டை ஆசியாவின் சக்தி வாய்ந்த நாடாக மாற்றுவார். ரணில் விக்ரமசிங்கவிடம் தேசிய நிகழ்ச்சி நிரல் மாத்திரமே இருக்கிறது. அது இந்த நாட்டை 2048 ஆகும்போது வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதாகும்.

அத்துடன் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நிலைமையில் சிலர் அவசரப்பட்டு தேர்தலைக் கோரி வருகின்றனர். இந்த நாட்டை மீண்டும் குழப்புவதற்கு, இவ்வாறு தேர்தலை கோரும் பின்னணியில் சர்வதேசத்தின் தேவைப்பாடும் இருக்கலாம். நாட்டு மக்கள் தேர்தலைக் கோருவதில்லை. விவசாயத்துக்கு தேவையான உரத்தைக் கேட்கின்றனர். வாழ்க்கைச் செலவை குறைக்குமாறு கோரு கின்றனர். ரணில் விக்ரமசிங்க மக்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவார். அதற்கு இடையூறு செய்ய வேண்டாம். அவரின் பயணத்துக்கு தடைகளை ஏற்படுத்த வேண்டாம். இவ்வாறு தடைகளை ஏற்படுத்துபவர்களுக்கு மக்கள் இடமளிக்கக்கூடாது. - என்றார். (05)

# நீர்க் கட்டண அதிகரிப்பை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராட்டம்

## அநுரகுமார அரசுக்கு எச்சரிக்கை

நீர்கட்டண அதிகரிப்புக்கு எதிராக விரைவாக மக்களை அணி திரட்டி நாடுபூராகவும் போராட்டம் மேற்கொள்ள இருக்கிறோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கம் நீர் கட்டணத்தை அதிகளவில் அதிகரிக்க எடுத்திருக்கும் நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியில் வாழ்வதற்கு கஷ்டப்பட்டும் வரும் நிலையில் அரசாங்கம் நீர் கட்டணத்தை 50 வீதத்தால் அதிகரித்திருப்பது, பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் மீது சுமத்தப்படும் பாரிய சுமையாகும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக விரைவில் மக்களை அணி திரட்டிக்கொண்டு நாடுபூராகவும் போராட்டங்களை மேற்கொள்ளவும் மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் இருக்கிறோம்.

அரசாங்கத்தின் இயலாமை காரணமாக தற்போது வைத்தியசாலைகளில் மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு மருந்து பிரச்சினை மற்றும் மக்கள் மீது சுமத்தியுள்ள பொருளாதார அழுத்தமும் அவர்கள் நோயாளர்களாக ஆகுவதற்கு பாரியளவில் தாக்கம் செலுத்துகிறது.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பாரியளவிலான வரி அதிகரிப்பு காரணமாகப் பொருள்கள் மற்றும் சேவை கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

அதேபோன்று பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதைக் காரணமாகக்கொண்டு இலட்சக்கணக்கானவர்கள் தொழிலற்று இருக்கின்றனர்.

எரிபொருள், மின்சாரம் மற்றும் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற நிலையில், மக்களின் அத்தியாவசிய நுகர்வுப்பொருளான நீருக்காக அறவிடப்படும் கட்டணம் பாரியளவில் அதிகரித்துள்ளதன் மூலம் மக்களை மேலும் கஷ்டத்துக்கு தள்ளி விட்டிருக்கிறது.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கை பூரணப்படுத்திக்கொள்வதற்காக மக்களுக்கு பாரியளவில் அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறது. மக்கள் மீது சுமத்தி இருக்கும் அனைத்துவகை



அழுத்தங்களுக்கு எதிராக மக்களை வாழவைக்கும் உரிமையை கோரி பாரிய போராட்டம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் தயார்.

அரசாங்கத்தின் இந்த செயலைக் கண்டித்தும் அதிகரிக்கப்பட்ட நீர் கட்டணத்தை மீள பெற்றுக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் விசேடமாக இது தொடர்பாக மக்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்து, மக்களை அணிதிரட்டுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். - என்றார். (05)

# மக்களுக்கு ராஜபக்ஷக்கள் மீது அதீத நம்பிக்கை உண்டு ஜனாதிபதி தேர்தலில் அரசியல் வரலாற்றில் மாற்றம் வரும்

## ரோஹித அபேகுணவர்தன நம்பிக்கை

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் பொதுஜன பெரமுனவுக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. நாட்டு மக் கள் ஏற்றுக்கொள்ளும் வேட்பாளரை வெகுவிரைவில் அறிமுகப்படுத்துவோம். பொதுஜன பெரமுனவே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பேருவளை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரசியல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை புறக்கணித்து செயற்படுவதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது. நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு காட்டு சட்டத்தை இல்லதொழித்தார். ஆகவே நன்றி மறக்கமாட்டோம்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்கள் தீர்மானமிக்கதாக அமையும். எம்முடன் இணைந்து ஜனாதிபதி செயற்பட்டால் ஒன்றிணைந்து செயற்படலாம். அரசியல் ரீதியில் அவர் தனித்து செயற்பட்டால் அதற்கு நாங்கள் முழுமையாக இடமளிப்போம்.

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குள் முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன என வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது. ஜனாதிபதி தேர்தல் குறித்து கட்சி என்ற ரீதியில் இதுவரை எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. கட்சியை பலப் படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் தொகுதி அமைப்பாளர் கூட்டங்கள் இடம்பெறுகின்றன.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமான அறிவிப்பு வெளியானதும் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் வேட்பாளரை விரைவாக களமிறக்குவோம். இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் இலங்கை அரசியல் வரலாற்றில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

நாட்டு மக்கள் ராஜபக்ஷர்கள் மீது முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். தவறுகளை திருத்திக் கொண்டு முன்னேற்றமடைவோம். இடம்பெறவுள்ள தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காலதாமதம், வீண் விரமயம்

**சமனல வாவியிலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீரை மூன்று நாட்களுக்கு விநியோகிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது நேற்று மாலையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. .**

**அத்துடன், தேசிய மின் தேவைக்கான மாற்றுத் தீர்வுகளை ஆராய்ந்து நீரை விநியோகிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. நேற்றுடன் 15நாட்களாக தொடர்ச்சியாக விவசாயிகள் நடத்திய போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாக இதனைப் பார்க்க முடியும். அதேநேரம் அரசியல்வாதிகளின் தீர்க்க தரிசனமற்ற செயலாகவும் இதனைக் கொள்ளமுடியும்.**

**சமனல வாவியிலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்காக நீரைத் திறந்து விடுமாறு கோரி விவசாயிகள் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்தியிருந்தனர். ஞாயிறன்று அவர்கள் விவசாய அமைச்சரின் வீட்டையும் முற்றுகையிட்டிருந்தனர். விவசாயிகளுக்கு ஆதரவாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் போராட்டக் களத்தில் குதிக்கப் போவதாக அறிவித்திருந்தது.**

**அரசுத் தலைவர் கோட்டாபயவுக்கு எதிரான அரகலய போராட்டத்திலும் இந்த அமைப்பு மிக முக்கியமான பங்காற்றியிருந்தது. கோட்டாபய ஊரடங்கு உத்தரவுகளைப் பிறப்பித்து கொழும்புக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழையத் தடை விதித்தபோதெல்லாம் துணிச்சலோடு அதற்கு மாற்று வழிகளைக் கண்டுபிடித்து கோட்டாவின் உத்திகளை முறியடித்து அவரை ஓட ஓட விரட்டியதில் இந்த அமைப்புக்குப் பங்குண்டு.**

**அதே அமைப்பு விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாக அறிவித்த உடனேயே சமனல வாவியிலிருந்து தண்ணீரைத் திறந்துவிடுவது என்று ஆளும் தரப்பு முடிவெடுத்திருக்கின்றது. இந்த முடிவை ஆட்சியாளர்கள் முன்கூட்டியே எடுத்திருக்கலாம். இப்போது 12 நாட்கள் தாமதித்து பயிர்களையும் காயவைத்து, கடைசியில் தண்ணீரைத் திறப்பதன் மூலம் பெரிதாக எந்த நன்மையும் விளையப்போவதில்லை. பயிர்கள் நாசமாகிப் போவதைத் தடுப்பது பெரும் சிரமமான காரியமாகவே அமையும்.**

**உரிய பணியை உரிய காலத்தில் மேற்கொள்வதற்குத் தவறும் இதுபோன்ற ஆட்சி முறையினால்தான் இந்த நாடு பெரும் இழப்புக்களையும் பொருளாதாரச் சரிவுகளையும் சந்தித்திருந்தது. அந்த நிலையில் இன்னும் மாற்றம் ஏதும் வந்துவிடவில்லை என்பதைத்தான் சமனல வாவி விவகாரம் காட்டுகின்றது.**

# ரிஜ்வே சிறுநீரக சிகிச்சை விவகாரம்: ஜனாதிபதிக்கு அசாத் சாலி கடிதம்



பொரளை லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் நடந்த முறைகேடான சிறுநீரக அறுவைச் சிகிச்சை குறித்து சுதந்திரமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அவர் கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளவைவருமாறு-

முஹம்மட் ஹம்தி எனும் குழந்தைக்கு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் நடத்தப்பட்ட சிறுநீரக அறுவைச் சிகிச்சையின்போது இடம்பெற்ற கொடூரத்தை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

சிறுவனின் செயலிழந்த இடது பக்க சிறுநீரகத்தை அகற்றுவதற்குப் பதிலாக, திறம்படச் செயற்பட்ட வலது பக்க சிறுநீரகம் அகற்றப்பட்டிருக்கிறது. இதனால், முஹம்மட் ஹம்தி என்ற மூன்று வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆனால், அறுவைச் சிகிச்சையில் நடந்த தவறை மறைக்கும் வகையிலேயே மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால், இந்தச் சிகிச்சைக்குப் பின்னால் பாரிய மோசடி இடம்பெற்றிருப்பதாக பலத்த சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. தவறுதலாக நடந்ததா? அல்லது திட்டமிட்டுத் திருடப்பட்டதா? என்பதை அறிவதில் மக்கள் ஆர்வமாக உள்ளனர்.

அவயங்கள் அபகரிப்பு மற்றும் சிறுநீரக மோசடியுடன் தொடர்புடைய மோசடிப் பேர்வழிகளின் கரங்கள் இதற்குப் பின்னாலிருந்திருக்கலாம். எனவே, இது குறித்த பின்னணிகளை அறிவதற்கு சுதந்திரமானதும், நியாயமானதுமான விசாரணைகளை நடத்துமாறு நான் கோருகிறேன்.

மருத்துவத்துறையை மாபியாக்களின் செல்வாக்கிற்குள் கொண்டுவரும் இவ்வாறான மறைமுக முயற்சிகளை நிறுத்துவதற்கு இந்த விசாரணைகள் உதவட்டும். சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் வகையில், இந்த விசாரணைகள் அமைவது அசியம். தங்களது நேர்மையான தலைமைத்துவம் இதைச் செய்யுமெனவும் நான் நம்புகின்றேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் -

01.மருத்துவநிபுணர்கள், தடயவியல்திறமையாளர்கள் மற்றும்சட்ட வல்லுநர்களைக் கொண்ட குழுவினரின் தலைமையில் விசாரணை நடத்தப்படல்.

02.முஹம்மட் ஹம்தியின் சிறுநீரக அறுவைச் சிகிச்சையில் ஈடுபட்டிருந்த அறுவைச்சிகிச்சையாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்களை விசாரணைக்குட்படுத்தல்.

03.சிறுவனின் சிறுநீரக மோசடியுடன்தொடர்புற்றிருந்த சகல வாஞ்சகர்களையும் சட்டத்தின் வெளிச்சத்துக்கு கொண்டுவருதல்.

04.குழந்தையின் சிறுநீரக சிகிச்சை சம்பந்தமான தகவல்களை வழங்குவோரின் அல்லது வழங்க முன்வருவோரின் இரகசியங்களைப் பாதுகாத்தல்.

05.அறுவைச் சிகிச்சைகளின்போது அவயங்களைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கும் வகையில், பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

என்பவற்றை வலியுறுத்தியே அசாத் சாலி இக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார். (05)

# உச்சத்தை தொட்டது வெப்பம்: 76 வீத சிறுவர்களுக்கு பாதிப்பு

யுனிசெவ் மதிப்பாய்வின்படி,ஏனைய அனைத்துப் பிராந்தியங்களுடன் ஒப்பிடும்போது, தெற்காசியாவில் 76 சதவீதமான சிறார்கள் அதிக வெப்பநிலை தாக்கத்துக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தெற்காசியாவில் 18 வயதுக்குட்பட்ட சுமார் 460 மில்லியன் சிறார்கள் அதிக வெப்ப நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக தெற்காசியாவில் 4 சிறார்களில், 3 பேர் ஏற்கனவே அதிக வெப்ப நிலைக்கு ஆளாகியுள்ளனர். உலகளவில் ஜூலை மாதம் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட அதிக வெப்பமான மாதமாகும். தெற்காசியாவில் உள்ள நாடுகள் தற்போது உலகில் அதிக வெப்பமானவை அல்ல, ஆனால் தெற்காசியாவில் நிலவும் வெப்பம், மில்லியன் கணக்கான பாதிக்கப்படக்கூடிய சிறார்களின் உயிருக்கு ஆபத்தான அபாயங்களைக் கொண்டுவருவதாக யுனிசெஃப் இன் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக சிறார்களிடையே நோய்கள் பரவக்கூடிய அதிக வாய்ப்புகள் உள்ளன என சுகாதார துறை அறிவுறுத்தியுள்ளது.

இதன்காரணமாக தாய்மார்கள் சிறார்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

தசைவலி, வாந்திபேதி, தூக்கமின்மை, அதிக தூக்க கலக்கம், மற்றும் பசியின்மை போன்றன ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், நீர் அருந்தாமல் சிறுவர்கள் பாடசாலை உள்ளிட்ட வெளியிடங்களுக்கு செல்லும் போது, அவர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாக நேரிடும். இதனை தவிர்த்து கொள்ளவதற்காக, அதிக நீரை அருந்துதல், இளநீர், தோடம்பழம், மற்றும் எலும்பிச்சை உள்ளிட்ட பானங்களை எடுத்துக்கொள்வது போன்ற அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு சுகாதார துறை தெரிவித்துள்ளது.

அத்துடன், அதிக வெப்பம் நிலவும் பிரதேசங்களில், நாளாந்தம் சிறுவர்களை 20 நிமிடங்களாவது நீரில் வைக்குமாறும், இதனூடாக சரும நோய்களை தவித்துக்கொள்ள முடியும் எனவும் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (05)

# யாழ். மாவட்டத்தில் வறட்சி: சுமார் 70 ஆயிரம் பேர் பாதிப்பு

வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் 69 ஆயிரத்து 113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது யாழ் மாவட்டத்தில் நிலவுகின்ற வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக இதுவரை 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் கூடுதலாக சங்கானை, சாவகச்சேரி பிரதேசசெயலாளர் பிரிவுகளில் உள்ள மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 15 ஆயிரத்து 965 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 160 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 135 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 160 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 1,028 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 146 பேரும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 956 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 67 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது 6 ஆயிரத்து 53 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 704 பேருக்கு குடிநீர் விநியோகத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - எனத் தெரிவித்துள்ளார். (05)

# மீண்டும் ஆரம்பமாகவுள்ள பண்டமாற்று முறைமைகள்

*இந்த மாதம் முதல் பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ் ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதியை ஆரம்பிப்பதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளது.*

*2012 ஆம் ஆண்டு ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்க்காக பண்டமாற்று ஒப்பந்ததின் படி, தேயிலை ஏற்றுமதிக்காக 2021 ஆம் ஆண்டு ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.*

*இந்தநிலையில், கடந்த ஆண்டு நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகள் காரணமாக அது தாமதமாகியது.*

*இந்த விடயம் தொடர்பில், இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்துடன் விரைவில் ஒப்பந்தம் செய்த பின்னர், தேயிலை ஏற்றுமதிக்கு தேவையானவற்றை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள திட்டமிடப்படப்பட்டுள்ளதாக இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல் தெரிவித்துள்ளார்.*

*பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ், 48 மாத காலப்பகுதியில் மாதாந்த அடிப்படையில் சுமார் 5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்ய இலங்கை உத்தேசித்துள்ளது.*

*இந்த ஏற்பாடு ஈரானுக்கு செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள 251 மில்லியன் அமெரிக்க டொலர் எண்ணெய் பட்டியல் தீர்ப்பதாகும் என நோக்கமாக கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*(05)*


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# ராஜபக்ஷவினர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமாம்

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ



கொள்ளை, ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இருந்து ராஜபக்ஷ தரப்பினரை பாதுகாத்து வருகின்றமைக்காக ஜனாதிபதிக்கு அவர்களேநன்றிதெரிவிக்க வேண்டுமெனஎதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

மஹரகமயில் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் -

அரசாங்கத்தின் பூரண அனுசரணையுடன்தான் ராஜபக்ஷக்கள் இன்று வாழ்ந்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மிஹிந்தலைக்குசென்று மின்சாரத்தை துண்டிக்க முடியுமாக இருந்தால், ஏன் மெதமுலனவுக்கு சென்று மின்சாரத்தை துண்டிக்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த ஆட்சியில்தான் ஊழல் மோசடிகள் அதிகளவில் நாட்டில் இடம்பெற்றுள்ளன.

தரமற்ற மருந்துகளால் எத்தனை பேர் உயிரிழந்தார்கள். இதுதான்இவர்களின் சுபீட்சமான நாடா?

இந்த நிலையில், திருமண வீட்டுக்கான மின்சாரக் கட்டணத்தை செலுத்தாமல்இருக்கும்நாமல் ராஜபக்ஷ, ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதாவது, தங்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண வேண்டும் என்று அரசியல் மேடையொன்றில் கூறியுள்ளார்.

தங்களால்நியமிக்கப்பட்ட ஜனாதிபதி என்றால் நீங் கள் ஒலிவாங்கிக்கு முன்பாக அன்றி, ஜனாதிபதி செயலகத்துக்குநேரடியாகசென்றே ஜனாதிபதியிடம் இதனைக் கூறுங்கள். கொள்ளை, ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இருந்து உங்கள் தரப்பினரை பாதுகாத்து வருகின்றமைக்காக ஜனாதிபதிக்கு நீங்கள் நன்றிகளையும் தெரிவியுங்கள்.

அத்தோடு, மிஹிந்தலை புன்னிய பூமியில், மின்சாரக் கட்டணம் நிலுவையில் இருந்த காரணத்தால், அங்கு மின் துண்டிக்கப்பட்டது.

எனினும், தன்னை ஜனாதிபதியாக்கிய ராஜபக்ஷக்களின் மின்கட்டணம் தொடர்பாக ஜனாதிபதிக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது.

விகாரைகளுக்குசென்று மின்சாரத்தை துண்டிக்க முடியுமாக இருந்தால் ஏன், மெதமுலனவுக்கு சென்று மின்சாரத்தை துண்டிக்க முடியாது?

ஏனெனில், மெதமு-லனவில்ராஜபக்ஷக்களுக்கு அரசாங்கத்தின் பாதுகாப்பு உள்ளது. அரசாங்கத்தின் அனுசரணையுடன்தான் அவர்கள் அங்கு வாழ்ந்து வருகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பம்









வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று (திங்கட்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வும் நடைபெற்றது.

இதனையடுத்து ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ஆதிசௌந்தரராஜ குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர்களால் நேற்று காலை முதல் விசேட கிரியைகள் நடைபெற்று மூலவர் அபிசேகம் மற்றும் விசேட ஆராதனைகள் நடைபெற்றதுடன் கொடிச்சீலைக்கும் விசேட பூஜைகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் விசேட பூஜைகள் நடைபெற்றதுடன் கொடிச்சீலை உள்வீதி வலம்வந்து கொடித்தம்பத்தில் விசேட பூஜைகள் நடைபெற்றன.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து கொடித்தம்பத்திற்கு விசேட பூஜைகள் நடைபெற்றதுடன் சுவாமி உள்வீதியுலா நடைபெற்றதை தொடர்ந்து பக்தர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

10 தினங்கள் நடைபெறவுள்ள வருடாந்த மஹோற்சவத்தில் தினமும் பிற்பகல் தம்ப பூஜை, சுவாமி உள்வீதியுலாவும் மாலையில் தம்ப பூஜை, வசந்தமண்டபபூஜைநடைபெற்று சுவாமி உள்வீதியுலா வெளிவீதியுலா நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தேரோட்டமும் மறுதினம் 16 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மாமாங்கேஸ்ரவர் தீர்த்தக்குளத்தில் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திற்கு வரும் பக்தர்களின்நன்மைகருதிவிசேடபோக்கு-வரத்துஒழுங்குகள்செய்யப்பட்டுள்ளதுடன் ஆலய வளாகத்தில் பக்தர்களின் நன்மை கருதி பல்வேறு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (05)

# தனியார் நிறுவனத்தில் இடம்பெற்ற விபத்தில் 7 இந்தியர்கள் படுகாயம்

கஸ்பேவ-தியகம வீதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றில் இடம்பெற்ற விபத்தில் ஏழு இந்தியர்கள் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தானது இரும்பு உருக்கும் கொதிகலனில் இருந்து எரிந்து கொண்டிருந்த இரும்புத் துண்டுகள் வெளியே வீசப்பட்டதால் ஏற்பட்டதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கஸ்பேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)





# தென்னிந்திய திருச்சபை யாழ்.ஆதீன முன்னாள் செயலாளர் காலமானார்

தென்னிந்தியதிருச்சபையின்யாழ்.ஆதீனத்தின்முன்னாள் செயலாளரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியின் முன்னாள் அதிபருமான வண. கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் (வயது 61) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

திடீர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியில் கடந்த 09 வருட காலமாக அதிபராகக் கடமையாற்றி இந்த வருட ஆரம்பத்தில் ஓய்வு பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெண்ணின் உயிரைப் பறித்த சாரதியின் ஆழ்ந்த உறக்கம்

சாரதி உறங்கியதால் ஏற்பட்ட விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் மீசாலை கிழக்கை சேர்ந்த , மகேஸ்வரன் நவரஞ்சிதம் (வயது 56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி வைத்தியசாலைக்கு செல்வதற்காக குறித்த பெண் பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது , வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த குறித்த கார் வீதியோரமாக நின்ற மரத்துடன் மோதி மரம் முறிந்து , அப்பெண்ணின் மீது விழுந்துள்ளது.

இவ் விபத்தில் படுகாயமடைந்த பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

காரின் சாரதி தூக்க கலக்கத்தில் மரத்துடன் காரினை மோதி விபத்து இடம்பெற்றதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்த நிலையில் பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# சர்வகட்சி மாநாட்டினை நடத்தி மக்களை முட்டாளாக்க முயற்சி

## ஜி.எல்.பீரிஸ் காட்டம்

13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த ஆளும் தரப்புக்குள்ளேயே இணக்கப்பாடு ஏற்படாத நிலையில், சர்வக்கட்சி மாநாட்டை நடத்தி மக்களை முட்டாளாக்கவே ஜனாதிபதி முற்படுகிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அவர், மாகாணசபைத்தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஏதேனும் யோசனைகள் இருந்தால், இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலகத்தால் அரசியல் கட்சிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது அர்த்தமற்ற ஒரு செயற்பாடாகும். மக் களை முட்டாளாக்கும் ஒரு விடயமே இது. நாம் எப்படி யோசனைகளை முன்வைக்க முடியும்?

சர்வக்கட்சி மாநாடு நடைபெற்றபோது, பொதுஜன பெரமுனவின்செயலாளர்சாகர காரியவசம், 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த ஒத்துழைக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு முன்னர் இருந்த 7 ஜனாதிபதிகளால் இதனை செய்ய முடியாமல் போனது. இதற்கான காரணத்தை முதலில் கண்டறிய வேண்டும்.

மக்கள் ஆணை உள்ள ஜனாதிபதிகளாலேயே இதனை செய்ய முடியாவிட்டால், மக்கள் ஆணை இல்லாத ஒரு ஜனாதிபதியால் எப்படி செய்ய முடியும்?

அத்தோடு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு தான் நாடாளுமன்றில் பெரும்பான்மை பலம் உள்ளது.

அந்தக் கட்சிக்கு இதில் உடன்பாடு இல்லை எனும் போது அரசாங்கம் இந்த செயற்பாட்டை எப்படி மேற்கொள்ளும்?

இந்த நிலையில், எமது யோசனைகளும் கோரப்பட்டுள்ளது.

யாரை ஏமாற்ற இதனை செய்ய வேண்டும்? இந்த செயற்பாட்டை வெற்றிகரமாக ஆரம்பிக்கும் முன்னர், அரசாங்கத்திற்குள் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும்.

மாகாணசபைகள் அனைத்தும் இன்று செயலழந்துள்ளன.


இதன் அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதிக்கு கீழ் வந்துள்ளன.

அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமெனில் முதலில் தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், இப்போதைக்கு தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இருக்கும்போது, மக்களை முட்டாளாக்கும் வகையில்தான் ஜனாதிபதி இந்த செயற்பாட்டை மேற்கொள்கிறார்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு 13ஆவது திருத்தச்சட்டம் அவசியம்

## அமைச்சர் சந்திரகாந்தன் கூறுகிறார்



13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால், நாட்டில் நல்லிணக்கம் ஸ்தீரப்படுத்தப்படும் என்று அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அவர், 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான பிழையான கண்னோட்டத்திலிருந்து பெரும்பான்மையின மக்களும் வெளியே வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தெற்கு மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் வடக்குகிழக்குத் தொடர்பில் கொண்டிருக்கின்ற பார்வைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கைப் பொறுத்தளவில் பிரிவினைவாத மற்றும் முற்போக்குவாத கட்சிகள் காணப்படுகின்றன.

எனினும் தெற்கு மக்கள் குறிப்பாக பெரும்பான்மையின மக்கள் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பது நாட்டைப் பிளவுபடுத்தும் என்ற சிந்தனையை முதலில் அகற்ற வேண்டும்.

இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போது ஜனாதிபதிக்கு மிகவும் சவாலான விடயமாகக் காணப்படுவது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் என்பனவாகும்.

எனவே இந்த விடயத்தில் அனைவருமே ஒரு விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

நம்பிக்கையீனங்கள் குறித்துப் பேசிக் கொண்டிருக்காமல் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

ராஜீவ் - ஜே. ஆர். ஜயவர்தன ஆகியோர் அன்று 13 ஆவது திருத்த சட்டமூலத்தை கொண்டுவந்தபோது அன்றைய அமைச்சரவையில் ஓர் அமைச்சராக அங்கம் வகித்த தற்போதைய ஜனாதிபதி, இந்த அதிகாரப் பகிர்வுப் பிரச்சினைக்கு நிரந்தமான தீர்வை முன்வைப்பார் என்று எனக்கு நம்பிகை இருக்கின்றது.

அதிகாரப் பகிர்வின் மூலம் நாடு துண்டாடப்படும் என்று தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் கருத்துக்களை வெளியிடும் அதே நேரம், முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும், எமக்கு முழுமையான அதிகாரப் பகிர்வு மாத்திரமே வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இவை இரண்டுமே இரு தீவிர நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது

எனவே ஜனாதிபதியின் முடிவுகளுக்கு விட்டுக் கொடுப்புக்களுடன் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(05)

# மன்னாரில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

மன்னாரில், இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் இன்று மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட அலுவலகத்தால் மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரி யக்கோபிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்டான்லி டிமெல் கலந்து கொண்டார். மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் பிரதேச செயலாளர்கள், வைத்தியர் ஒஸ்மன் டெனி, திணைக்கள தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டனர். இலத்திரனியல் கழிவுகளை முறையாக சேகரிப்பதன் மூலம் சுற்றாடலை பாதுகாத்தலும், முகாமைத்துவம் செய்தலும் எனும் கருப்பொருளின் கீழே இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இதில் முதற் கட்டமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோர் இலத்திரனியல் கழிவுகளை மாவட்ட பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர். நேற்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை இலத்திரனியல் கழிவுகளை மன்னார் மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் ஒப்படைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# விளையாட்டுக் கழகத்துக்கு சீருடைகள் அன்பளிப்பு









பனங்காடு அக்னி விளையாட்டுக் கழக உறுப்பினர்களுக்குஇணைந்தகரங்கள்அமைப்பால் விளையாட்டு சீருடைகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த சீருடை வழங்கும் நிகழ்வு அக்னி விளையாட்டு கழகத்தின் உறுப்பினர் ரவிந்திரன் வினோஜன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை காலை11.00மணியளவில்பனங்காடுவிளையாட்டு மைதானக் கட்டடத்தில் இடம்பெற்றது.

ஆலையடிவேம்புபிரதேசத்தில்தனக்கென ஓர் இடத்தை வைத்துக் கொள்ளும் கழகமாகவும், பல சமூக சமய செயற்பாடுகளில் அக்கறை காட்டிவரும் கழகமாகவும் பனங்காடு அக்னி விளையாட்டு கழகம் திகழ்கின்றது.

இந்தச் சீருடைக்கான நிதி பங்களிப்பை இளையதம்பி கவிராஜ் வழங்கி இருந்தார்.

மேலும்இந்தநிகழ்வில்அதிதியாகஇளையதம்பி ரவிராஜ் கலந்து கொண்டு விளையாட்டு கழகத்தின் சீருடையை உறுப்பினர்களிடம் அறிமுகம் செய்து அவர்களுக்கு வழங்கி வைத்தார்.

மேலும் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகர் ரமேஸ், கழக இயன் மருத்துவர் ரா. கரன், ஆலையடி வேம்பு விளையாட்டு உத்தியோகத்தர் நிசாந்தன், ஆசிரியர் வாசன், மனோராஜ் ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான சுரேஷ், காந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பனங்காடு அக்னி விளையாட்டு கழகத்துக்கான சீருடையை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

## குச்சவெளியில் விபத்து இளைஞன் பரிதாப சாவு

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பள்ளவக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்துவிபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த மோட்டார் சைக்கிள்வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மரக்கட்டையில் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத்தெரியவருகின்றது. குறித்தவிபத்தில் தோப்பூர், 7 ஆம் வட்டாரம், இக்பால் நகரைச் சேர்ந்த அப்துல் ரகுமான் முஹம்மது அன்சார் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## 54 கிலோ கஞ்சாவுடன் யாழில் ஒருவர் கைது

### இருவர் தப்பி ஓட்டம்

யாழில்54கிலோ300கிராம்கேரளகஞ்சாவுடன்ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இருவர் தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை கடற்படையினருக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்தே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்டவர் கிளிநொச்சி தர்மபுரம் பகுதியை சேர்ந்த 26 வயதான இளைஞர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்துவரும்பொலிஸார், தப்பிசென்றஇருவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர். (05)

## இரண்டு வாள்களுடன் இளைஞர் கோண்டாவில் பகுதியில் கைது!

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் இரண்டு வாள்களுடன் இளைஞர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து கோண்டாவில் ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த இரண்டு வாள்களும் மீட்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த வீட்டில் வசித்து வரும் இளைஞனைக் கைது செய்த பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.2023இல் வெளியிடப்பெற்றது.